REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 22உ புதன் (6—7—55) ★ ★ வெளியூர்: ஆனி 23உ வியாழன் (7—7—55) [இதழ் 19

மாடுகளுக்குப் பதில் மனிதர்கள்

நிலம் உழ ஏர் இழுத்த கொடுமை!

ஆமதாபாத்திற்கு 20 கல் தொலைவில் உள்ள நாதியாட் எனுமிடத்தில், ஒரு கிறித்துவ மருத்துவ சாலைக்குச் சொந்தமான நிலத்தில், மாடுகளுக்குப் பதிலாக, மனிதர்கள் ஏரில் கட்டப்பட்டு நிலத்தை உழுததாகப் பத்திரிகைச் செய்தி ஒன்று அறிவிக்கிறது.

அந்த நிலத்தில் நான்கு மனிதர்கள், ஏர் நுகத்தடியில் தங்கள் கழுத்துக்களை கயிறுகளால் பிணைத்து, ஏர் இழுத்து, நிலத்தை உழுதனராம்!

பஞ்சாப் அரசாங்கத்தின் அகோரம்!

★

பத்திரிகை அலுவலகங்களில் சோதனை

பத்திரிகை இதழ்கள் பறிமுதல்— நிலையங்கள் பூட்டப்பட்டன

ஜலந்தர், ஜூலை 5—

அகாலி கட்சியைச் சேர்ந்த நான்கு செய்தித் தாள்கள் அலுவலகங்களிலும், அவைகள் அச்சடிக்கப்படும் அச்சுக் கூடங்களிலும், போலீஸ் திடீர் சோதனை நடத்தியது. அலுவலகங்களைப் பூட்டியும்விட்டது, போலீஸ்!

'டெய்லி பிரபாத்' (உருது), 'டெய்லி அகாலி' (குருமுகி) ஆகிய இரண்டு தினசரிகளும், மாஸ்டர் தாரா சிங்கிற்குச் சொந்தமானதாகும்.

'டெய்லி அஜித்' (உருது), 'அகாலி பத்திரிகா' (குருமுகி) ஆகிய இரண்டும் அகாலி கட்சியின் பொறுப்பில் நடத்தப்படும் செய்தித் தாள்களாகும்.

அகாலியர் சட்டத்தை மீறும் போக்கை ஆதரித்து எழுதுவதிலிருந்து தடுப்பதற்காகவும், வகுப்பினர்களுக்கிடையில் பகையை மூட்டுவதைத் தடுக்கவும், பஞ்சாப் அரசாங்க பாதுகாப்புச் சட்டத்தின் 9-வது பிரிவின்கீழ், மேற்படி நான்கு பத்திரிகாலயங்களும் சோதிக்கப்பட்டு, போலீசாரால் மூடப்பட்டுள்ளன.

4-ந் தேதி இரவு 11 மணிக்குத் துவங்கிய போலீஸ் சோதனை, அதிகாலை 5 மணிக்குத்தான் முடிவடைந்தது!

சோதனையின்போது, நூற்றுக் கணக்கான பத்திரிகை இதழ்களும், வேறு சில ஏடுகளும் கைப்பற்றப்பட்டன. இப்பத்திரிகைகளின் நேற்றைய காலை-மாலை இதழ்கள் முழுவதையும் போலீஸ் பறிமுதல் செய்துவிட்டதுடன், அப்பத்திரிகைகள் வினியோகிக்கப்படுவதும், விற்கப்படுவதும் தடுக்கப்பட்டுவிட்டது.

அன்றைய இதழ்களில் அமிருத்சரசில் நடைபெற்ற போலீஸ்-அகாலியர் மோதுதல் குறித்து மிகைபடவும், அரசாங்கத்தின்மீது ஆத்திரமூட்டும் வகையிலும் எழுதப்பட்டிருக்கிறது என்பது போலீஸ் தரப்பின் குற்றச்சாட்டாகும்.

★

நேற்றைய சம்பவங்கள்

போலீசாரின் நடவடிக்கையும் விளக்கமும்

அமிர்தசரஸ், ஜூலை 4—

அகாலி தளத்தவர் நடத்திய கிளர்ச்சியின்போது ஏற்பட்ட கலவரத்தை ஒட்டி சிரோமணி குருத்துவார் பிரபந்தக் குழு, அகாலிதளம், பொற்கோயில் குழு ஆகியவற்றின் காரியாலயங்களில் போலீசார் திடீரென நுழைந்து 200 அகாலிகளைக் கைது செய்துள்ளனர் என்றும், அவர்களிடமிருந்து சில 'தஸ்தாவேஜு'கள் பறிமுதல் செய்யப்பட்டதென்றும் கூறப்படுகிறது. இதுபற்றி பத்திரிகை நிருபர்களிடை பேசிய போலீஸ் அதிகாரி அகாலி தள இயக்கத்தை நியாய விரோத

(4-ம் பக்கம் பார்க்க)

மக்கள் சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டார்

பெப்சு அகாலிதளத்தின் தலைவரும், மக்கள் சபை உறுப்பினருமான சர்தார் உக்கும் சிங் அமிர்தசரசில் கைது செய்யப்பட்டுள்ளார். சிரோமணி குருத்துவார் பிரபந்தக் குழுவின் தலைவரான பரவா அரிகிஷன் சிங்கும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி இரு தலைவர்களையும், பெப்சு முன்னாள் முதல் மந்திரியான சர்தார் கியான் சிங் ரேர்வாலா சந்தித்துப் பேசினார்.

★

அகாலியருடன் பெப்சு முன்னாள் முதலமைச்சர் ரேர்வாலா!

அமிர்தசரஸ் மோதுதலின் எதிரொலி

டெல்லி அதிகாரிகளிடையே பெரும் அதிர்ச்சி

அகாலிதளத்தை சட்ட விரோதமாக்க யோசனை?

சிம்லா, ஜூலை 5—

அமிருதசரசில் போலீசாரை எதிர்க்க அகாலி கிளர்ச்சிக்காரர்கள் தாராளமாகத் துப்பாக்கியையும், கைத் துப்பாக்கியையும் கையாண்டது, மத்திய அரசாங்க அதிகார வட்டாரத்திற்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

பலாத்காரத்தில் ஈடுபடும் அகாலிதளத்தை 'சட்ட விரோத நிறுவனம்' என அறிவித்துவிடக் கூடாதா என்று அவ்வதிகாரிகள் நினைக்கத் தொடங்கி உள்ளனர்.

அமிருதசரசில் எதிர்பாராவகையில் ஏற்பட்ட போலீஸ் திடீர் தாக்குதலும், தலைமறைவாக இருந்து வந்த அகாலி தலைவர்களைப் போலீஸ் கைது செய்திருப்பதும், அகாலி கிளர்ச்சிக்காரரிடை திகைப்பூட்டி இருக்கிறது என அதிகார வட்டாரம் கருதுகிறது!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—19/55

ஜூலை 15: மும்முனைப் போராட்ட நினைவு நாள்!

வரும் ஜூலை 15-ஆம் நாளை தி. மு. கழகத்தின் மும்முனைப் போராட்ட நினைவு நாளாக எல்லாக் கிளைக் கழகங்களும் கொண்டாடுமாக!

★ தென்னாட்டவரை அடிக்கடி அலட்சியப்படுத்திப் பேசிய பண்டித நேருவுக்குக் கண்டனத்தைத் தெரிவிக்கவும், வளர்ந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றலை அறிவிக்கவும் நடத்தப்பட்ட

இரயில் நிறுத்தப் போராட்டம்;

★ ஆச்சாரியாரின் ஆகாத ஆரம்பக் கல்வித் திட்டத்தை அகற்ற வேண்டும் என்று வற்புறுத்த நடத்தப்பட்ட

ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வி எதிர்ப்பு மறியல் போராட்டம்;

★ வடநாட்டு அரசியல் ஆதிக்கம்—முதலாளித்துவ ஆதிக்கம்—மொழி ஆதிக்கம் ஆகியவற்றின் அறிகுறியாக இருந்துவரும் டால்மியாபுரம் என்ற புகைவண்டி நிலையப் பெயரை அந்த இடத்தின் பெயரான கல்லக்குடி என்று மாற்றுவதன் மூலம், மேற்கண்ட ஆதிக்கங்களை எதிர்க்கும் சக்தி தென்னாட்டில்—திராவிடத்தில் உருவாகிறது என்பதை இந்திய அரசியலாருக்கு உணர்த்தவும், வட நாட்டு ஆதிக்கம் அகல வேண்டும் என்ற உணர்ச்சியை திராவிட மக்களுக்கு ஊட்டவும் நடத்தப்பட்ட

டால்மியாபுரப் பெயர் மாற்றப் போராட்டம்

ஆகிய மூன்று போராட்டங்களும் மூன்று முனைகளில் 1953 ஜூலை 15-ஆம் நாள் சிறப்பாக நடத்தப்பட்டன.

அந்தப் போராட்டங்களின் மூலம் பெற்ற வெற்றிகளைப் பற்றிப் பொதுமக்களுக்கு நினைவுபடுத்தவும், பெற வேண்டிய வெற்றிகள் குறித்துப் பொதுமக்களுக்கு ஊக்கம் அளிக்கவும் இவ்வாண்டும் சென்ற ஆண்டைப்போலவே ஜூலை 15-ஆம் நாளை கழகத் தோழர்கள் அமைதியான முறையில், கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவற்றைப் பின்பற்றி ஊர்வலம் நடத்துதல், பொதுக்கூட்டம் கூட்டுதல், துண்டு அறிக்கை வெளியிடுதல் போன்ற நிகழ்ச்சிகளை மேற்கொண்டு கொண்டாடுவார்களாக!

ஜூலை 15-ஆம் நாள், திருச்சி மாவட்டக் கழகம் தொண்டர் அணி ஒன்று அமைத்து, டால்மியாபுர இரயில்வே நிலையப் பெயர்ப் பலகையில் 'கல்லக்குடி' என்ற அச்சிட்ட தாளை, அமைதியான முறையில், ஊர்வலமாகச் சென்று ஒட்டி, தி. மு. கழகத்தின் கோரிக்கையை இந்திய அரசியலாருக்கும், பொதுமக்களுக்கும் உணர்த்தும்.

"அறிவகம்," சென்னை 6—7—1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

உருக்கு தொழிற்சாலை வெறும் மதிப்பூட்டும் தொழிலாம்!

வேலையின்மையைப் போக்க உதவாதாம்!

வடநாட்டின் துரோகச் செயலுக்கு உருக்கு உற்பத்தி மந்திரியின் விதண்டாவாதம்!

சென்னை, ஜூலை 6—

"இரும்பு உருக்கு போன்ற கோடிக்கணக்கான ரூபாய் செலவு ஏற்படக்கூடிய தொழிற்சாலைகள் வெறும் பெருமைக்காக உபயோகப்படுமே ஒழிய, ஒரு சிலருக்குத்தான் வேலை அளிக்கும்; ஆகவே, இத்தொழிற்சாலைகளை அமைக்குமாறு தமிழ் நாட்டு மக்கள் வற்புறுத்தாமல், ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை தரக்கூடிய எஞ்சினியரிங் தொழில்கள் ஏற்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்,"

—என்று, மத்திய சர்க்கார் தொழில் வர்த்தக இலாகா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி சென்னையில் 'சிம்சன் குரூப்' தொழிலாளர் சங்க மாநாடு ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவில், மூன்று வார்ப்பட தொழிற்சாலைகளை நிறுவ சர்க்கார் உத்தேசித்திருப்பதாகவும், இவற்றில் ஒன்று சென்னையில் நிறுவப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'கல்வி முறை மாற வேண்டும்'

"வேலையற்றோரின் தொகையைப் பெருக்கிக்கொண்டு போகும் இப்போதைய கல்வி முறையை அடியோடு மாற்றி அமைப்பது மிக அவசியமாகும்,"

என்று டாக்டர் இராசேந்திர பிரசாத் வார்தாவில் கூறியுள்ளார்.

அமெரிக்க சுதந்திர தின விபத்துக்கள்

நூற்றுக் கணக்கானோர் பலி

அமெரிக்காவில், சுதந்திர தினக் கொண்டாட்டத்தில், சாலை விபத்துக்களில், 302 பேர் மாண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. 162 பேர்கள் நீரில் மூழ்கியும், வேறு விபத்துக்களில் 87 பேர்களும் இறந்தனராம்!

தென்னாட்டில் சில நாள் தங்க!

இராசேந்திரர் விருப்பமாம்!

சிம்லாவில் உள்ளது போல தென்னாட்டு மாநிலம் ஒன்றில் ஒரு 'ராஷ்டிரபதி நிவாஸ்' ஏற்படுத்த டாக்டர் இராசேந்திர பிரசாத் உத்தேசித்திருக்கிறாராம்.

நாட்டின் எல்லாப் பகுதிகளுடனும் பரிச்சயம் கொள்ளவும், ஆண்டில் சில கிழமைகள் தென்னாட்டில் கழிக்கவும் அவர் விரும்புவதாகவும் தெரிய வருகிறது.

தென்னாட்டு 'நிவாஸ்' ஐதராபாத்தில் ஏற்படக்கூடுமாம்!

இன்று, சமுதாய அபிவிருத்தித் திட்டம், மற்றும் தேசிய அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் மூலம் மொத்தம் 6,22,00,000 பேர் பயன்பெற்று வருகின்றனர்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 6—7—'55 புதன்

காங்கிரஸ் சமதர்ம வடிவம்!

ஆவடிக்குப் பிறகு, தாங்களும் சமதர்ம சமுதாயத்தைக் காண்பதில் கவலை கொண்டிருப்பதாகக் காங்கிரஸ் தலைவர்களும், ஏடுகளும் கூருத நாட்கள் கிடையாது. சமதர்ம வடிவத் தீர்மானத்தின்மூலகர்த்தாவான இந்தியப் பிரதமரோ, தனது சமதர்ம வடிவ சித்தாந்தம் பற்றி தரும் விளக்கங்களுக்கும் ஓர் எல்லையே கிடையாது. ஒரு நாள் கூறும் விளக்கம், மறு நாள் தரும் விளக்கத்தால் சிதைக்கப்பட்டு வருகிறது. அடுத்த நாள் செப்பும் கருத்து, முன் இரண்டு நாள் கூற்றையும் குப்புறக் கவிழ்க்கக்கூடியதாக இருக்கிறது.

அதிகம் கூறுவானேன்? ஆவடி சமதர்ம வடிவத்தின் உட்பொருள் இன்னதுதான் எனத் திட்டவட்டமாகப் பண்டிதாலேயே இதுவரை வரையறுக்கப்படவில்லை என்றுதான் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு பொருள் ஆவடி தீர்மானத்திற்குப் பொருந்தக் கூடியதாக இருக்குமானல், பிரதமர் 'அது-இது' என்றெல்லாம் அடிக்கடி முரண்பட பேசிக்கொண்டிருக்க வேண்டிய கட்டாயம் பிரதமர் பண்டிதருக்கு ஏற்பட்டே இருக்காது.

காங்கிரஸ் சமதர்ம வடிவத்திற்குரிய பொருளை விளக்கிக் கூறுவதிலேயே, அதன் சிருஷ்டிகர்த்தாவிற்கே அத்தகைய இடர்பாடும், அறிவுக் குழப்பமும் இருக்கிறது என்றால், அத்தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு, செயலேற்பாடுகளைச் செம்மையுறச் செப்பனிட்டு, செயலாற்ற முனைவது என்பது, எவரின் சிந்தனைக்கும் அப்பாற்பட்ட ஒன்றாகத்தானே இருக்க முடியும்? குறிப்பிட்ட ஒரு பொருளாதார அமைப்பில், தத்துவரீதியான தெளிவைப் பெறுவதில் ஏற்படும் குழப்பம், அந்த அளவோடு கட்டுப்பட்டு நின்றுவிடக்கூடியதல்ல. அக்குழப்பம், ஒவ்வொரு நடவடிக்கையிலும் பிரதிபலிக்கத்தான் செய்யும்.

சமதர்ம வடிவ ஏற்பாடு என வாயளவில் பேசிக்கொண்டு, கதம்பப் பொருளாதார அமைப்பை காங்கிரஸ் செயலாற்றிவருகிறது—செயலாற்றத் திட்டம் தீட்டிக்கொண்டும் இருக்கிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை. இக்கதம்பப் பொருளாதாரப் போக்கு, காங்கிரஸ் கண்டுபிடிப்பல்ல.

முதலாளித்துவப் பொருளாதார முறை குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், கதம்ப முறையை ஏற்றுக்கொண்டு தீரவேண்டிய நிர்ப்பந்த நிலையைப் பெற்றுவிடுகிறது. தொழில் துறையில் உச்சநிலையைப்பெற்றுள்ள நாடுகளின் நிகழ்காலம்; மேற்குறிப்பிட்டுள்ள உண்மையை மெய்ப்பித்துக்கொண்டு இருக்கிறது. எனவே, காங்கிரஸ் கடைப்பிடித்துவரும் கதம்பப் பொருளாதார நடவடிக்கையில், இதுவரை இல்லாத வகையில் கூடுதலாகவோ, குறைவாகவோ காங்கிரஸ் கூறிடும் சமதர்ம வடிவம் அமைந்திருக்கவில்லை என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

பழைய கருப்பனை என்றும் போல் கருப்பன் என அழைப்பதை விடுத்துப் புதிதாகக் கருப்பையா என அழைக்க முற்படுவது எதற்கு? கருப்பன் என்ற சொல் கேள்விப்பட்டு கேள்விப்பட்டு ஒலியினால் உருவாகும் ஒருவிதப் பகட்டை—கவர்ச்சியை இழந்துவிட்டிருப்பதாலும், கருப்பையா என்பது புதுமையானதாகவும், கேட்பதற்கு ஒரு புதுப் பகட்டைப் புகட்டுவதாகவும் இருக்கின்ற காரணத்தால், கருப்பன் கருப்பையாவாக மாற்றப்படுகிறான்.

அதே போக்கைப் பின்பற்றித்தான், அறிந்தோ அறியாமலோ பலரால் பழிக்கப்பட்டும், சொல்வதற்கே அஞ்சப்பட்டும் வரும் முதலாளித்துவப் பொருளாதார முறையைப் பின்பற்றிவரும் காங்கிரஸ், அம்முறைக்கு ஏற்பட்டுள்ள தாழ்நிலையையும், இழிநிலையையும் வெளிப்படையாக ஒப்புக்கொள்வதற்கு அஞ்சியும், அதனால் இளம் பருவத்தினரை தன் பிடிப்பில் மேலும் சில ஆண்டுக் காலத்திற்காவது வைத்திருக்கமுடியாதே என்ற கவலையின் மிகுதியாலும், தான் பின்பற்றிவரும் அவலட்சணத்திற்கு, மக்களை மயக்கும் ஒரு புதுப் பெயரைக்கொடுத்து அழைக்க முற்பட்டிருக்கிறது. அப்படித்தரப்படும் புதுப் பெயரும், இளைஞர்கள் கருத்தைக் கவரக்கூடியதாகவும், சிறந்தது எனப் பலரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக, தனது பழம்போக்கிற்கு, சமதர்ம வடிவம் எனப் பெயரிட காங்கிரஸ் துணிந்துவிட்டது.

தனது பழைமைபோக்கிற்கு சமதர்மம் என்ற பெயரைக் கொடுக்கும் அளவிற்குக் காங்கிரஸ் துணிவு பெற்றிருக்கவில்லை. காரணம், அதற்குள்ள நல்லெண்ணம் அல்ல; நேர்மை நாட்டமும் அல்ல; ஆனால், சமதர்ம முறையின் பொருள் தெரிந்த சில பலர் உலகில் இருக்கிறார்களே என்ற அச்சத்தால்தான், தனது போக்கைச் சமதர்மம் என்று சுருக்கமாகக் கூற காங்கிரஸ் முன்வரவில்லை.

அதற்காகத்தான் 'வடிவம்' என்ற ஒரு அடைமொழியை சமதர்மம் என்ற ஒரு உயர்ந்த தத்துவத்தைக் குறிக்கும் சொல்லுடன் ஒட்ட வைத்து, தனது முதலாளித்துவக் கதம்பப் பொருளாதார ஏற்பாட்டிற்குப் புதுப் பெயர் சூட்டியிருக்கிறது காங்கிரஸ். ஆவடி சமதர்ம வடிவத்தின் உண்மை வரலாறு இவ்வளவுதான்!

1955 மார்ச் இறுதிவரை, சமுதாய அபிவிருத்தி திட்டத்துக்காக உழைப்பு, நிலம் ரொக்கம் மூலமாக மக்கள் அளித்த பங்கின் மொத்த மதிப்பு ரூ. 10.21 கோடி. இத்திட்டத்துக்கு சர்க்கார் செலவு செய்த மொத்தத் தொகை ரூ. 20.50 கோடி!

மைக்கா தொழில் வீழ்ச்சியுறுகிறது

கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்படும்?

பெரும்பான்மையான தொழிலாளர் வேலை இழப்பர்

பாட்னா, ஜூலை 5—

இந்திய 'மைக்கா' தொழிலுக்குக் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. சென்ற 1952-ம் ஆண்டிலிருந்தே மைக்கா துண்டுகளுக்கு இருந்துவந்த 'கிராக்கி' குறைந்து கொண்டே வந்திருக்கிறதாம்.

மைக்காவுக்கு மேற்கூறியபடி கிராக்கி குறைந்துவிட்டதால், மைக்கா தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் வேலை நீக்கம் செய்யப்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஏற்கனவே, பதிவு செய்து கொள்ளப்படாத சிறு சிறு தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. பெரும் பெரும் தொழிற்சாலைகளில்கூட, வழக்கமான ஆட்களை நீடித்து வைத்திருப்பதே கடினமாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு தொழில்களின் கூலி விகிதப் பிரச்சினை!

சென்னை, ஜூலை 5—

அச்சகங்கள், சிறு தொழிற்சாலைகள், சிற்றுண்டிசாலைகள், கயிறு, கைத்தறித் தொழில்கள் ஆகியவற்றின் கூலி சம்பந்தமான விவரங்களைச் சேகரிக்க வேண்டுமென குறைந்தபட்ச கூலி நிர்ணய போர்டு முடிவு செய்துள்ளது.

கேஸ்கரின் வாக்குறுதி

"அடுத்த இரண்டு அல்லது மூன்றாண்டுகளில், குறைந்த விலையில், 'ரேடியோ செட்' இல்லாத இடமே இந்தியாவில் இருக்காது; அவற்றின் மூலம் வானொலியை மக்கள் நன்கு கேட்க முடியும்," என்று, இந்திய சர்க்கார் ஒலிபரப்பு—விளம்பர இலாகா அமைச்சர் கேஸ்கர் கூறியுள்ளார்.

திகைப்புறுகிறார்களாம்!

இந்தியா—இலங்கை ஒப்பந்தங்களை மறுத்துவிட வேண்டுமென்ற இலங்கையின் கோரிக்கையைக் கண்டு புதுடில்லியில் திகைப்புண்டாகி இருக்கிறதாம்! ஒப்பந்தப்படி இலங்கை நடந்துகொள்ளாததால், உண்மையில் மறுப்பு கூற வேண்டிய நாடு இந்தியாதான் என்று பார்வையாளர்கள் கருதுகின்றனராம்!

குடிநீரும், மின்விசிறி வசதியும் கூடிய புதுவகை பஸ்!

பஞ்சாப் பிரயாணிகளுக்குக் கிடைக்கிறது!

பஸ் நிர்வாகத்தால் மாதந்தோறும் ரூ. 80,000 லாபமாம்

அமிர்தசரஸ், ஜூலை 5—

நீண்ட தூரம் பிரயாணம் செய்வோருக்குக் குடிதண்ணீர், மின்சார வசதி, சோடா பானங்கள் முதலிய வசதிகள் கொண்ட புதுவகை பஸ்களை பஞ்சாப் சர்க்கார் பஸ் இலாகா விடுமாம்.

இந்த வசதிகள் எல்லாம், பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போதே கிடைக்கும் என்று கூறப்படுகின்றது.

அந்தப் பஸ்களிலேயே, சிறுநீர் கழிப்பது முதலான வசதிகளை அமைப்பது பற்றியும் தாங்கள் யோசித்துக்கொண்டிருப்பதாக அரசாங்க பஸ் போக்குவரத்து நிர்வாகி தெரிவித்திருக்கிறாராம்.

இந்தப் புதிய வகை பஸ் ஒவ்வொன்றும் சுமார் ரூ 30,000 செலவில் வாங்கப்பட்டவையாம்.

பிரயாணிகளுக்கு எவ்வளவு அதிகமான வசதிகளைச் செய்துதர முடியுமோ அத்தனை அதிகமான வசதிகளைச் செய்துதர சர்க்கார் முன்வரும் என்றும், இந்த வகைச் செலவுக்காக சுமார் ரூ 9 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாயும் அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பஸ் போக்குவரத்தை நடத்துவதினால் சர்க்காருக்கு சென்ற ஆண்டு சராசரியாக மாதந்தோறும் ரூ 80,000 இலாபம் கிடைத்தது என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

இந்தப் பஸ் நிர்வாகத்தில் பணிபுரியும் சுமார் 650 தொழிலாளர்களுக்கும் ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கிறதெனவும், தொழிலாளர்களுக்குக் கடன் தருவதற்கென இந்தச் சங்கத்திற்கு, இலாகா சுமார் ரூ 40 ஆயிரம் ஒதுக்கியிருக்கிறதெனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ரூ. 6¼ கோடி செலவில் புதிய சாலைகள்!

12,000 கிராமங்களை இணைக்குமாம்

விந்திய பிரதேசத்தில் திட்டம்

விந்திய பிரதேச மாநிலத்தில் சுமார் 12,000 கிராமங்களை இணைக்கும் தார் ரோடுகளை அமைப்பது தான், மாநிலத்தின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்படி—போக்குவரத்து வசதிகளை அதிகரிக்கும் திட்டத்தில் முக்கியமானதாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

விந்தியப் பிரதேச கிராமங்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் தேவி சிங் முதலிய கொள்ளைக் கூட்டத்தினரைப் பிடிக்க முடியாதிருப்பதற்குக் காரணம் கிராமப்புறங்களில் போதுமான போக்குவரத்து வசதிகள் இல்லாதிருப்பதே என்பதால், இந்தத் திட்டத்திற்கு முதலிடம் தரப்பட்டு தீவிரமாக நிறைவேற்றப்படும் என்று கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்திற்கு செலவாகுமென மதிப்பிடப்பட்டிருப்பது ரூ 6,25,00,000 என்று மாநில மந்திரிகளுள் ஒருவரான கோபால் சரண் சிங் என்பார் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆந்திர காகிதத் தொழிற்சாலை

விரிவுபடுத்தத் திட்டம்

கர்னூல், ஜூலை 4—

இராஜமகேந்திரபுரத்தில் உள்ள ஆந்திர காகிதத் தொழிற்சாலையை ரூ. 50 லட்சம் செலவில் விரிவுபடுத்துவதற்கான திட்டம் பற்றிய விபரங்களை அனுப்புமாறு மத்திய சர்க்கார் கோரியிருக்கிறதாம்.

இந்தத் திட்டத்தை ஏற்கனவே மத்திய சர்க்கார் அங்கீகரித்திருப்பதாகவும், அது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், சேர்க்கப்படுமெனவும் கூறப்படுகிறது.

இந்தத் திட்டப்படி, தொழிற்சாலையின் உற்பத்தி இரண்டுமடங்காக்கப்படுமென்று கூறப்படுகிறது. ஆலையில் புதிய இயந்திர சாதனங்கள் வைக்கவும் ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிகிறது.

குடிசையில் வாழ ஆசையுறுகிறாராம்!

குடியரசு தலைவர் கூறுகிறார்

ஒரு குடிசையில் வாழ்ந்து கொண்டு, மக்களுக்குச் சேவை செய்ய தாம் விரும்புவதாக குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திரர் கூறியிருக்கிறாராம்.

தாம் இதைச் செய்யும் நன்னாளை எதிர்நோக்கியிருப்பதாக ஐதராபாத்தில், கிராம சேவகர்கள் கூட்டமொன்றில் அவர் குறிப்பிட்டாராம்.

இதனால், தாம் கிராம மக்களுக்குச் சேவை செய்யும் எளிய வாழ்க்கைக்கு எத்தனை முக்கியத்துவம் தருகிறார் என்பதை மக்கள் புரிந்துகொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தாராம்.

இந்தியாவின் பொருளாதார நிலை

தாழ்ந்திருப்பது பற்றி நிபுணர்

பம்பாய், ஜூலை 4—

"திட்டங்கள் வகுப்பதற்கு முன்னால் நாட்டின் பொருளாதார நிலையைத்தான் பெரிதும் கவனிக்க வேண்டும்; அப்படிக் கவனித்தால்தான்—'இந்தியா மிகவும் ஏழை நாடு; இங்கேதான் அரைப் பட்டினிகளும், அரை ஆடை உடுத்துவோரும் நிரம்ப இருக்கின்றனர்,' என்பதை உணர முடியும்;

"பெரும் நிலப் பரப்பும், மக்கள் தொகையும் கொண்ட இந்தியாவின் வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ. 450 கோடிதான்; ஆனால், இந்தியாவின் நிலப் பரப்பில், 12-ல் ஒரு பாகமுள்ளதும், மக்கள் தொகையில் ஆறில் ஒரு பாகமுள்ளதுமான இங்கிலாந்திலோ மாத வருமானம் ரூ. 500 கோடியாகும்;

"கல்விக்காக மட்டும் இங்கிலாந்து ஆண்டொன்றுக்கு ரூ. 340 கோடி செலவு செய்கிறது; ஆனால், இந்தியாவில், படிப்பின்மை, சுகாதாரக் குறைவுகள், பாதுகாப்பின்மை ஆகியவை நிலவுகின்றன; இந்தியாவின் விவசாய தொழில் உற்பத்திகள் மிகவும் குறைவாக உள்ளன; இந்த நாட்டில் உள்ள மற்றொரு முக்கியமான சிக்கல், சோம்பேறித்தனத்தை எப்படிப் போக்குவது என்பதுதான்;

"கூட்டுறவு விவசாயப் பண்ணையின் மூலம்தான் விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும்; இந்திய விவசாயிகளுக்கு போதுமான அளவு நிலங்கள் இல்லை; அதனால் அவர்களுக்கு சரியான பொருள் வருவாய் இல்லை; எனவே, நிலவுடைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டும்,"

என்று, புகழ் பெற்ற பொருளாதார, சரித்திரக் கல்வி நிபுணரான டாக்டர் முகர்ஜி இங்கு கூறினார்.

பட்டாள வீரர்களைப் போல்செல்கின்றனராம்

மாஸ்கோ, ஜூலை 4—

"நாங்கள், ஜெனீவாவில் நடைபெற இருக்கும் நான்கு வல்லரசு மாநாட்டிற்கு, 'உடைந்த கால்களு'டன் போகவில்லை; பட்டாள வீரர்களைப் போலவே தான் போகிறோம்,"

என்று, சோவியத் ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவரான குருஷ்சேவ், அமெரிக்க 179-வது சுதந்திர தின விழாவை யொட்டி மாஸ்கோவில் நடைபெற்ற விருந்து உபசாரம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில, மேற்கத்தியர்களுக்கு எச்சரிக்கை விடும் முறையில் கூறியிருக்கிறார்.

இந்திய டெலிபோன்கள் உற்பத்திசாலையில் 26,040 டெலிபோன்களும், 14,000 எக்ஸ்சேஞ்சு லைன்களும், 1954 ஏப்ரல், செப்டம்பரில் உற்பத்தி செய்யப்பட்டன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

வடக்கே விரிகிறது — தெற்கே சுருங்குகிறது

ரூ. 500 கோடித் திட்டம் ரூ. 200 கோடிக்கு சுருக்கப்பட்டுவிட்டது

ஆந்திர மாநிலத்திற்கு இரண்டாம் திட்டத்தில் பங்கு

கர்னூல், ஜூலை 4—

ஆந்திர சர்க்கார் தயாரித்திருந்த இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் இப்போது மந்திரி சபையினல் ரூ 200 - கோடி அளவில் சுருக்கப்பட்டு விட்டது.

ஆரம்பத்தில், பல இலாகாக்களின் தலைவர்களும், சுமார் 500 - கோடி ரூபாய்க்கான திட்டம் தயாரித்திருந்தனர்; அந்தத் திட்டத்தை மாநில திட்ட அபிவிருத்திக் குழு விவாதித்து, ரூ. 300 - கோடிக்கு சுருக்கிற்று.

பின்னர், தேசிய திட்டக் குழுத் துணைத் தலைவரான வி. டி. - கிருஷ்ணமாச்சாரியுடன் மாநில முதன் மந்திரி பேச்சு வார்த்தைகள் நடத்தியதைத் தொடர்ந்து, ஆந்திர மந்திரி சபை கூடி, மீண்டும் திட்டங்களை 'புனர் பரிசீலனை' செய்து இப்போது திட்டத்தை ரூ. 200 கோடி அளவில் சுருக்கி விட்டனர் என்று தெரிய வருகிறது.

மாநிலத்தின் இரண்டாம் திட்டம், முதல் திட்டத்தைப் போன்று சரியாக இரண்டு மடங்கிற்கும் அதிகமாக இருக்கக் கூடாதென் வி. டி. கிருஷ்ணமாச்சாரி சுட்டிக் காட்டியதாகக் கூறப்படுகிறது.

அதன் பேரிலேயே, ரூ. 500 - கோடி அளவில் உருவாக்கப்பட்ட ஆந்திர மாநிலத்திட்டம் இப்போது ரூ 200 கோடி அளவில் சுருக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

குறுக்கெழுத்துப் போட்டிகள்

சட்ட நிபுணர் குழு கருத்து

"இந்திய அரசியல் சட்டப்படி, போட்டிப் பந்தயங்கள், சூதாடுதல் முதலியன மாநிலங்களைப் பொறுத்த பிரச்சினையாதலால், அவை பற்றி சட்டமியற்றுவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது.

"ஆனல், இரண்டுக்கு மேற்பட்ட மாநிலங்கள், அந்த பிரச்சினைகள் பற்றி சட்டமியற்றுமாறு மத்திய அரசாங்கத்தைக் கோரினல் மட்டுமே மத்திய அரசாங்கம் அவ்வாறு சட்டமியற்ற முடியும் என்று அரசியல் சட்டத்தின் வேறொரு விதி கூறுகிறது; எனவே, இரு மாநில சட்ட சபைகள் குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்துமாறு சட்டமியற்றுமாறு கோரப்படாத வரையில் சட்டம் இயற்றவேண்டாம்" என குறுக்கெழுத்துப் போட்டி பற்றிய நகல் மசோதாவைப் பரிசீலித்த சட்ட நிபுணர் குழு கருத்தறிவித்திருக்கிறதாம்.

மறுக்கிறார்!

திரு-கொச்சி ஆறுகளின் உபரி நீரை, சென்னை மாநிலம் பயன்படுத்திக் கொள்வது சம்மந்தமாக இரு அரசாங்கங்களுக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடைபெறுவதாகக் கூறப்படுவதை திரு-கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் மறுத்தார்.

பரிசீலனை செய்கிறதாம்!

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசின் வழக்குகளை திரும்பப் பெறுவது குறித்து சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாகவும், இது பற்றி இறுதி முடிவு ஏதும் செய்யப்படவில்லை எனவும், வழக்குகளை திரும்பப் பெறுவதில் சட்டப் பிரச்சினைகள் எதுவும் கிளம்பாது என தான் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

வருமான வரி வசூல்

துரிதப்படுத்த மேலும் 250 அதிகாரிகள்

உடனடியாக நியமிக்கப்படுவாராம்

ஐதராபாத், ஜூலை 4—

வருமான வரி வசூலைத் துரிதப்படுத்துவதற்கென இன்னும் சுமார் 250 வருமான வரி அதிகாரிகள் உடனடியாக நியமிக்கப்படவிருக்கின்றனர் என்ற தகவலை மத்திய அரசாங்க ரெவினியூ மந்திரி மணிலால் ஷா தந்திருக்கிறார்.

வருமான வரி தருவோரிடமிருந்து சர்க்கார், அவர்கள் தரவேண்டியதற்குமேல் ஒரு தம்பிடி கூட அதிகமாக வசூலிக்கவில்லை என்றும், வருமான வரி வசூலிக்கும் ஒவ்வொரு அதிகாரியும் இவ்வளவு வசூலிக்க வேண்டும் என்று இலாகா நிர்ணயம் செய்திருக்கவில்லையென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆப்பிரிக்காவில் ஆசியர் மீது தாக்குதல்?

ஒரு இந்தியர் நடுத் தெருவில் கொலை செய்யப்பட்டாராம்

நைரோபியில், கார்சன் பாபட் என்ற 33 வயதான இந்தியர் ஒருவரை நடுத்தெருவில் நான்கு ஆப்பிரிக்கர்கள் கத்திகொண்டு தாக்கிக் கொலை செய்தனர் என்று போலீசார் தெரிவித்திருக்கின்றனர்.

பல மாதங்களுக்குமுன் இரு இளைஞர்கள் தாக்கப்பட்டதையொட்டி, தொடர்ந்து பல ஆசியர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறதாம்.

இந்த ஆசியர்களை 'மாவ் மாவ்' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தூக்கிச் சென்றுவிடுவதாக வேறு கூறப்படுகிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்றரை வருட காலத்தில் மொத்தம் 330 மைல் நீளமுள்ள புதிய பாதைகள் போடப்பட்டன; 2,434 மைல் நீளத்துக்கு ஏற்செனவே இருந்த பாதைகள் சீர் செய்யப்பட்டன; 25 பெரிய பாலங்களை அமைக்கும் வேலை பூர்த்தியாயிற்று.

கூடிவாழும் கொள்கை

அமெரிக்கா ஏற்கும் காலம் நெருங்குகிறதாம்!

தலைமை உயர் நீதிமன்ற நீதிபதி கருத்து

கல்கத்தா, ஜூலை 4—

"பல்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட மக்களும் கூடி வாழும் கொள்கையை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது,"

என்று, அமெரிக்க தலைமை உயர் நீதிமன்ற நீதிபதி வில்லியம் டக்லஸ் என்பார் குறிப்பிட்டிருக்கிறார்.

"போட்டி காரணமாக, உலகம், நீர்வளிக் குண்டு போன்ற படுநாசத்தை விளைவிக்கும் ஆயுதங்களை எதிர்நோக்கியிருக்கும் இந்தச் சமயத்தில் கூடிவாழ்வது அவசியமாகும்; இது பற்றி விவாதத்திற்கே அவசியமில்லை. கூடிவாழ்தல் அவசியமானது—தவிர்க்க முடியாதது — அவசியமானது — இது ஒன்றுதான் பரிகாரத்திற்கான வழியாகும்," என்றும் அவர் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

பொதுச்செயலாளருக்கு ஆரணி, சேவூர் தந்த வரவேற்பு

மாபெரும் ஊர்வலம்—கூட்டங்கள்

மாநில மாநாட்டிற்கு நிதியளிப்பு

25—6—55 பகல் 12½ மணிக்கு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆரணி பஸ் நிலையத்தை அடைந்தார். ஆரணி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே.பி. கண்ணன், மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் பொதுச்செயலாளரை வரவேற்று தோழர் சுந்தரேசன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர்.

மாலை 6 மணிக்கு பாண்டு வாத்தியங்கள் முழங்க, இலட்சிய ஒலிகளை முழக்கிக்கொண்டு ஆயிரக்கான மக்கள் பின்தொடர பொதுச் செயலாளர் அவர்கள் திறந்த காரில் மறுமலர்ச்சி மன்றத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். இறுதியில் ஊர்வலம், தர்மராஜா கோவில் திடலில் வந்தடைந்தது.

அங்கு, மாலை 7 மணியளவில், தோழர் பி. டி. சுப்பிரமணியம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பொதுச் செயலாளர் அவர்கட்கு நகர தி. மு. கழகம், பல மன்றங்கள், கழகங்கள் சார்பில் வரவேற்பிதழ்களும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. பொதுச் செயலாளரைப் பாராட்டி தோழர்கள் கே. பி. சுந்தரம், அ. ப. நடராசன், தர்மராசன், கே. பி. கண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். ஆரணி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. பி. கண்ணன் மாநில மாநாட்டு நிதிக்கு ஆரணி தி. மு. கழகச் சார்பில் பொதுச் செயலாளர் அவர்களிடம் ரூ. 101 கொண்ட பணமுடிப்பு அளித்தார்.

இறுதியில் பொதுச்செயலாளர் அவர்கள் தமக்குத் தரப்பட்ட வரவேற்பு, பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டும், ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு தேய்வுறும் நிலை குறித்தும், திராவிடம் பிரியவேண்டிய அவசியம் குறித்தும், கழகத்தின் வருங்கால ஆக்கவேலைகள் குறித்தும் சிறியதோர் சொற்பொழிவாற்றினார்.

★

சேவூர் (வ. ஆ.):

25—6—55 மாலை 7 மணிக்கு சேவூர், மணப்பாறை குமாரவேல் அரங்கில் தோழர் முல்லை-சத்தி தலைமையில் சேவூர் தி. மு. கழகக் கிளையின் 5-வது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. விழாவை தோழர் ஆர். தருமராசன் துவக்கி வைத்தார். தோழர் வி. இ. செயராமன் வரவேற்புரை ஆற்றினார். தோழர்கள் போளூர் கே. சுப்பிரமணியம், க. அறிவழகன் ஆகியோர் பேசியபின், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவாற்றினார். பொதுச் செயலாளர் அவர்கட்கு இராட்டினமங்கல், தென்னூர் ஆகிய கிளைக் கழகங்கள் சார்பில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டது. சேவூர் தி. மு. கழகச் சார்பில் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டதுடன், கைத்தறித் துண்டும் அணிவிக்கப்பட்டது. பின்னர், மாநில மாநாட்டு நிதிக்காக பொதுச்செயலாளர் அவர்களிடம் ரூ. 25 தரப்பட்டது.

கூட்டத்திற்குப் பின்னர் இரவு 11 மணியளவில் செங்காடு செந்தமிழ் நாடக மன்றத்தாரால், தோழர் மு. கருணாநிதி எழுதிய 'தூக்குமேடை' நாடகம் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

ஊராண்மைக் கழக வரவேற்பு

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு, சேவூர் ஊராண்மைக் கழகச் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டு, வரவேற்பிதழும் வாசித்தளிக்கப்பட்டது.

தெற்கு வியட்நாமில் 100 ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது

ஜினிவா ஒப்பந்தப்படி தேர்தல் நடத்தக் கோரியதே குற்றமாம்!

சைகோன், ஜூலை 4—

தென்வியட்நாமையும்-வடவியட்நாமையும் இணைக்கும் தேர்தல்கள் வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களில் ஆண்களும்—பெண்களுமாக சுமார் 100 பேர்களை போலீசார் கைது செய்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

வியட்நாம் இராணுவத் தலைமை அலுவலகத்தின்முன் இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடியதும் போலீசார் அவர்களைச் சுற்றி வளைத்துக்கொண்டு விசாரணைக்காக வண்டிகளில் ஏற்றிக்கொண்டு சென்றனராம்.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இந்தோ - சீனவில் போர் நிறுத்தம் செய்த ஜினிவா ஒப்பந்தப்படி வடக்கு, தெற்கு வியட்நாம் நாடுகள், 1956 ஜூலையில் பிரிக்கப்பட்ட தங்களின் நாட்டை திரும்பவும் ஒன்றுபடுத்துவதற்காக கூட்டுத் தேர்தல்கள் நடத்தவேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது.

ஆனல், தென் வியட்நாம் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. தென்வியட்நாம் பிரதமரான தின் தியெம், தாம் தேர்தல் நடத்த ஒப்புக்கொள்ளவில்லை எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மாறாக, அவர், தென்வியட்நாமில் ஒரு மக்களாட்சியை நிறுவுவதற்காக தேர்தல் நடத்துவதற்கான வேலைகளை மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அப்படி புதிதாக அமையும் மக்கள் சபைதான், கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து நாடு முழுவதற்குமாக தேர்தல் நடத்த வேண்டுமா என்பதை முடிவு செய்ய வேண்டும் என்று, பிரதமர் தியெம் விரும்புவதாக சர்க்கார் வட்டாரங்கள் கூறுகின்றன.

'காந்தியார் முற்போக்குத் தலைவர்'

வாந்தி எடுத்ததை மீண்டும் விழுங்குகிறது!

'கம்யூனிஸ்டு' ஏட்டின் புதிய கற்பனை!

பாரிஸ், ஜூலை 5—

காந்தியார் அவரது வாழ்நாளில் இந்தியாவின் ஆத்மார்த்தத் தலைவராக இருந்தபோதிலும்கூட, இப்போது ஒரு முற்போக்குத் தலைவராக இருப்பதாக சோவியத் ரஷ்யாவின் கண்களுக்குப் புலனாகிறதாம்

இந்தக் கருத்து, சோவியத் கம்யூனிஸ்டு கட்சி, விமர்சன இதழான 'கம்யூனிஸ்டு' என்ற இதழின் சமீபத்திய வெளியீட்டில் காணப்படுகிறதாம்.

காந்தியாரை, ஆதிக்கத்தை எதிர்த்த ஒரு ஜனநாயக வாதியாகக் கருதுமாறு சோவியத் மக்களை அந்த இதழில் வெளியாகியுள்ள கட்டுரை கேட்டுக்கொண்டிருக்கிறதாம்!

துருக்கி தேசியத் தலைவரான கமால் அத்தாதுர்க்கைப் பற்றியும் சோவியத் தன் கருத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்றும் அக்கட்டுரையில் கோரியிருப்பதாகக் கூறப்படுகிறது.

"உண்மையில், கீழ்த்திசை பற்றிய விஷயங்களில் சோவியத் நிபுணர்கள் தங்கள் நோக்கத்தையே மாற்றிக்கொள்ள வேண்டும்;

"ஆசிய அரசாங்கங்களை, மார்க்சிய, லெனினிசக் கொள்கை அறிவின் திமிரான முடிவோடு நிர்ணயிக்கக்கூடாது; ஆசிய மக்களையும், அவர்களது வரலாற்றையும், தீர்க்கமாக—தெளிவாக கற்று ஆராய வேண்டும்; அவர்களின் மொழிகள் தெரிய வேண்டும்; அவர்களது இலக்கியங்களைக் கற்க வேண்டும்,"

என்றெல்லாம் சோவியத் நிபுணர்களுக்கு 'கம்யூனிஸ்டு' இதழின் கட்டுரை அறிவுரை வழங்கியிருக்கிறதாம்!

மூன்றே மாதங்களில்!

5,700 மது விலக்குக் குற்றங்கள்

சேலம், ஜூலை 1—

"சேலம் மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 5,700 மதுவிலக்குக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன," என்று மாவட்ட போலீஸ் அதிகாரியின் அறிக்கை கூறுகிறது.

ஆனல், கடந்த ஆண்டு இதே மூன்று மாதங்களில் 5,553 குற்றங்களே கண்டுபிடிக்கப்பட்டனவாம் இந்த ஆண்டில் சென்ற ஆண்டைவிட குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன என்றும் தெரிகிறது.

1955 மார்ச் திங்களில் மட்டும் 1,971 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டன என்றும், அவற்றில் 1,916 குற்றங்கள், மதுவிலக்கை ஒட்டியன என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

உணவு விடுதிகளில் வழங்கப்படும் உணவு

சென்னை சுகாதார அமைச்சர் கருத்து

"தேக நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்கு போதுமான—வளமிகு உணவுதான் முக்கியமானதாகும்; உணவு விடுதிகளில் வழங்கப்படும் உணவு சுத்தமானதாகவும், முழுமையானதாகவும் இருக்கவேண்டும்,"

என்று, சென்னை சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டி, உணவு விடுதி ஒன்றின் குளிர்பானப் பிரிவைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அழகிரிசாமி வாசகசாலை

கிரப்பாளையத்திலுள்ள மேற்படி வாசகசாலை (தி. மு. கழகம்) புதிய முறையில் செப்பனிடப்பட்டு, 1—7—55 முதல் துவக்கப்பட்டுள்ளது. தினமும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் திறந்து வைக்கப்படும்.

திருப்பரங்குன்றம் பகுத்தறிவு மன்றம்

3—7—55ல், திருப்பரங்குன்றம் நாயக்கர் சத்திரத்தில், தோழர் பி. கே. சேதுராமன் தலைமையில் நடைபெற்ற மன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தோழர்கள் எஸ். அறிவழகன், இரா. சு. அரசக்கண்ணன், எஸ். மணிமொழியன் ஆகியோர் மன்ற வளர்ச்சி குறித்தும், தோழர் மதுரை எஸ். முத்து அவர்கள் இயக்க வளர்ச்சி, இயக்கத் தோழர்களின் கடமை குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

போர்ச்சுகல் நாடு கோவாவிற்கு வழங்கும் போலி சுயாட்சி!

கோவா முதலிய போர்ச்சுக்கீசிய உடைமைப் பகுதிகளுக்கு நிர்வாக, நீதி விவகாரங்களில் 'சுயாட்சி' வழங்குவதற்கான திட்டம் ஒன்றை போர்ச்சுகீசிய சர்க்கார் அங்கீகரித்திருக்கிறது.

இந்தத் திட்டுக்கள் எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒரு சட்டசபை அமைக்கப்படும். அதில் 23 உறுப்பினர்கள் இருப்பர்; அவர்களில் 18 பேர் தேர்தல் மூலம் வருவர்; ஐவரை சர்க்கார் நியமிக்கும்.

இந்தச் சட்டசபை, ஆண்டிற்கு இருமுறை கோவாவில் கூடும்; கவர்னர்—ஜெனரலோ, அவரது பிரதிநிதியோ தலைமை வகிப்பார்.

வெளிநாட்டுக் கொள்கை சம்மந்தமாகவும், இத் திட்டுக்களில் 'போர்ச்சுகீசிய சமுதாயம் முழுவதின் நலன்' பற்றிய கொள்கை சம்மந்தமாகவும் போச்சுகீசிய மத்திய சர்க்கார்தான் முடிவு செய்யலாம்; இவைபற்றிச் சட்டமியற்ற கோவா சட்டசபைக்கு அதிகாரம் கிடையாது

அகாலியர் கிளர்ச்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மானதோர் இபக்கமாகக் கருத முடியாவிட்டாலும், அவர்களின் சட்ட விரோதமான செய்கைகளை அனுமதிக்க முடியாது என்றும், அகாலிதளக் கிளர்ச்சிக்காரர்களின் பிரச்சினையில் அதிகாரிகள் பெருமளவுக்குப் பொறுமையுடன் இருந்து வந்திருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

"அகாலிதளத்தவர் கொடிகள் ஏந்திக்கொண்டு ஊர்வலம் வந்ததையொட்டி இராணுவத் தலையீட்டிற்கு ஏதாகிலும் அறிகுறிகள் உண்டா?" என்று கேட்கப்பட்டபோது, அவ்வதிகாரி, ஏற்கனவே துருப்புகள் அனைத்தும் கோபிந்த்சார் கோட்டையில் தங்கியுள்ளன என்றும், தற்போது இராணுவ உதவி தேவையில்லாவிடினும், நெருக்கடியான கட்டத்தில் அவர்களது உதவியும் நாடப்படலாம் என்றும் கூறியிருக்கிறார்.

அகாலிதளக் கிளர்ச்சிகளில் தப்பித்து ஓடி தலைமறைவாக இருப்பவர்களையும் குற்றவாளிகளையும் கைது செய்யவே மேற்படி காரியாலயங்கள் போலீசார் திடீர் முற்றுகையிட நேரிட்டது என்றும், 'கிளர்ச்சியினின்றும் தப்பித்து ஓடுபவர்களை தர்பார் சாஹிப் எனும் இடத்தில் அனுமதிக்கப்படக்கூடாது' என்று அகாலி தள சர்வாதிகாரியான சர்தார் பூபேந்திர சிங்மான் அறிக்கை விடுத்திருந்தும், அகாலிதளம், மேற்படி உறுதியை நடைமுறையில் கடைப்பிடிக்கவில்லை என்றும், 4 அகாலிகள் மட்டுமே தங்களைக் கைது செய்துகொள்ள முன்வந்தனர் என்றும் அவர் கூறினார்.

நகர நீதிபதி அடிக்கடி மேற்படி இடத்திற்கு ஒரு போலீஸ் குழுவினருடன் சென்று, அவர்களைச் சரணடைந்துவிடுமாறு எச்சரிக்கை விடுத்து வருவதாகவும், எனினும் இதுவரை எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

தாங்கள் எவ்வளவோபொறுமையுடன் இருந்தும்கூட அங்கு மேற்கொள்ளப்பட்ட செயல்களால், 'துரதிருஷ்டவசமாக'த் தங்கள் பொறுமையை இழந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபட நேர்ந்தது என்றும், இனிமேல் குருராம்தாஸ் சேராவுக்கு அருகில் உள்ள இடங்களைச் சுற்றி எந்த நேரத்திலும் போலீஸ் பாராவைக்கப்படுமென்றும், அங்கு எந்தவிதமான சட்டவிரோத நடவடிக்கைகளும் நடைபெற்றால் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தக் காரணத்தினாலேயே இனிமேல் திவான் ஆஸ்தானத்திற்கருகில் எந்தவிதப் பொதுக் கூட்டமும் நடைபெற அனுமதிக்கப்படமாட்டாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'சிறைகள் நிரம்பும்!'

கெடுபிடி மாறத் திட்டம்

அகாலி தள தலைவர் எச்சரிக்கை

ஜலந்தர், ஜூலை 4—

"பஞ்சாப் மாநில சர்க்கார் தற்போதைய தனது கொள்கையையே நீடித்துக் கடைப் பிடிப்பதாக இருக்குமானால், மாநிலத்திலுள்ள சிறைகள் அனைத்தும், மாஸ்டர் தாராசிங்கின் பின்னணியிலுள்ள அகாலிகளான சீக்கியர்கள் அத்தனை பேராலும் நிரப்பப்படும்,"

என்று, அகாலி தளத் தலைவரில் ஒருவரான சர்தார் கோபால் சிங் குவாமி என்பவர் எச்சரிக்கை ஒன்று விடுத்துள்ளார்.

மாநில சர்க்கார், அகாலி தளத்தின்மீது கொண்டுள்ள அடக்குமுறைகளை விடுத்து, பஞ்சாப் மொழி வழி மாநிலக் கோரிக்கையை எதிரொலிக்கும் ஒலி முழக்கத்திற்கு விதித்துள்ள தடையையும், சீக்கியர் பிரச்சினையையும் தீர்த்து வைக்குமானால், அகாலி தளத்தவர் மேற்கொண்டுள்ள எதிர்ப்புக் கிளர்ச்சியினை நிறுத்துவது சம்மந்தமாக அகாலிதளத் தலைவரான மாஸ்டர் தாராசிங்கைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தேசியச் சீக்கியர்களின் போக்கை வன்மையாகக் கண்டித்துப் பேசிய அவர், 'தேசியச் சீக்கியர்கள் எப்போதுமே இதே நிலையில்—வெறும் பார்வையாளர்களைப் போல் இருந்துவிடலாம் என்பது முடியாத காரியம்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சச்சார் சர்க்காரின் கொள்கைகளில் இனதேப உணர்ச்சி உருவாக்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

இந்த கெடுபிடி நிலையை நிவர்த்தி செய்ய நான்கு அம்சங்கள் கொண்ட ஒரு திட்டம் வைத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்.

விசைத் தறி ஆலை நிறுத்தப்பட்டது

2,000 தொழிலாளர் பரிதவிப்பு

சாங்லி, ஜூலை 5—

இச்சால்கரஞ்சி எனுமிடத்திலுள்ள விசைத்தறி ஆலையில், 900 விசைத் தறிகள் வேலை செய்வதினின்றும் நிறுத்தப்பட்டுவிட்டதால் சுமார் 20,000 தொழிலாளர்கள் வேலையினின்றும் விலக்கப்பட்டனர் என்று செய்திகள் கூறுகின்றன.

வரி விதிப்பு அதிகரிப்பின் காரணமாக அந்த விசைத்தறி ஆலைகளுக்கேற்பட்ட நஷ்டம் குறித்து விசாரணை நடத்த ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட வேண்டுமென்றும், அந்தக் குழு தனது பதிலைத் தரும் வரையில் மேற்படி ஆலையில் வரி விதிப்பு நிறுத்திவைக்கப்பட வேண்டுமென்றும் டெக்கான் உற்பத்தியாளர் சங்கச் செயலாளர் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

எர்ணகுளத்தில் ஒருவியாதி ஆராய்ச்சி நிலையம்

இந்திய சர்க்காரின் தாராளமே தாராளம்!

எர்ணகுளத்தில், யானைக் கால் வியாதிபற்றி ஆராய ஒரு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு மத்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்!

அண்மையில் இவ்வியாதி பற்றிப் பல நிபுணர்கள் திரு - கொச்சியில் 'சர்வே' நடத்தினர்கள்.

அந்த நிபுணர்கள் குழு செய்துள்ள சிபாரிசின் பேரிலேயே இந்த ஆராய்ச்சி நிலையத்தைக் கட்ட மத்திய சர்க்கார் தீர்மானித்துள்ளனராம்!

பாக்-ஆப்கன் தகராறு

எல்லை காந்திக்கு தடை நீடிக்கும்

ஆப்கானிஸ்தான் தகராறு விஷயத்தில் பாகிஸ்தான் ஒரு முடிவுக்கு வரும் வரை செஞ்சட்டைத் தலைவர் கான் அப்துல் கபார்கான் மீதுள்ள தடையை நீக்க முடியாதென்று பாகிஸ்தான் உள்நாட்டிலாகா மந்திரி மேஜர் - ஜெனரல் இஸ்கந்தர் மிர்ஜா ஒரு பேட்டியின் போது தெரிவித்திருக்கிறாராம்.

கான் அப்துல் கபார்கான் எல்லை மாநிலத்திற்குள் நுழையக் கூடாதென தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கும் — ஆப்கானிஸ்தானுக்குமிடையே அரசியல் உறவுகள் எந்த நிமிடமும் முறிந்துவிடலாமென்று பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை மந்திரி உறுதி செய்திருக்கிறார்.

ஆப்கானிஸ்தான் பிடிவாதமாக இருந்தால், அங்கு பாகிஸ்தான் தூதுவராலயத்தை வைத்துக் கொள்ள முடியாதென்றார்.

பாக். கவர்னர்-ஜெனரல் உடல் நிலை

சுவிட்சர்லாந்தில் ஓய்வுபெற்று வரும் பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் குலாம் முகமது சென்ற வாரத்தில் சிறிது உடல்நிலை குன்றியதாகவும், எனவே, தனி விமானத்தில் அவர் லண்டனுக்குக்கொண்டு வரப்படுகிறாரென்றும் செய்திகள் கூறுகின்றன.

வழக்கு 'வாபஸ்'

பாகிஸ்தான் மத்திய அரசாங்க முன்னாள் மந்திரி குலாம் அலி தால்பூர், சிந்து மாநில முன்னாள் முதன் மந்திரி காஜி பஸ்லுல்லா ஆகியோர் மீது தொடுத்த சதி வழக்கை திரும்பப் பெற்றுக் கொள்ள சிந்து சர்க்கார் முடிவெடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

பாக்.அரசியல் நிர்ணய சபைத் தலைவர்

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைக்கு பஞ்சாப் கவர்னர் முஸ்தபா அகமத் குர்மானியை தலைவராக கவர்னர்—ஜெனரல் நியமித்திருக்கிறார்.

அழைப்பு ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிந்தால், முன்னாள் ரஷ்யப் பிரதமரும், தற்போதுள்ள மின்சார இலாகா மந்திரியுமான ஜியார்ஜ் மாலெங்காவை பிரிட்டனுக்கு தாம் அழைக்கத் தயாராக இருப்பதாக ரஷ்யாவில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் வில்லியம் ஹேட்டர் கூறியிருக்கிறார்.

சென்னையில்

மாநில மாநாட்டு நிதிக் கூட்டம்

★

"10-7-55 காலை 9 மணிக்கு, சென்னை, கோகலே மண்டபத்தில், தோழர் அலிசேக் மன்சூர் தலைமையில் 'எது தேவை' என்னும் பொருள் பற்றி, தோழர் டி. கே. சீனிவாசன் சொற்பொழிவாற்றுவார்.

நன்கொடை அணா 8, 4.

தோழர்கள் பெருவாரியாக வந்து மாநில மாநாட்டு நிதிக் கூட்டத்தைச்சிறப்பிக்கவேண்டும்,"

என்று, சென்னை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி வேண்டிக்கொள்கிறார்.

கழகக் கூட்டம்

★

பஞ்சநதிக்குளம்

கீழச்சேத்தி மாரியம்மன் கோவில் திடலில்

8—7—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

என். வி. நடராசன்

ந. தருமலிங்கம்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஜூலை 7: தைலாபுரம் (திண்டிவனம்)

8: பஞ்சநதிக்குளம்
காலை: திருமணம்;
மாலை: பொதுக் கூட்டம்

10: சென்னை
காலை: திருமணம்
சித்தூர்
மாலை 4 மணிக்கு: கிளைக் கழகத் துவக்கம்
மாலை 6 மணிக்கு: பொதுக்கூட்டம்

காமராசரின் உறுதி!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முடிவடைவதற்குள், குடிநீர் வசதி இல்லாத கிராமமே இருக்கக் கூடாதென்று சென்னை சர்க்கார் உறுதியுடனிருப்பதாக தென்காசியில், முதலமைச்சர் காமராசர் கூறியுள்ளார்.

சமுதாய நலத் திட்டப் பிரதேசங்களில், 1955 மார்ச் மாதம் வரை, பாசனவசதி அளிக்கப்பட்ட கூடுதலான நிலப் பகுதியின் மொத்த பரப்பளவு 9,95,736 ஏக்கரா.

உபதேசமும்-உருபலனும்!

★

"சிதம்பரம் நடராஜப் பெருமானைக் கும்பிட்டால் 'முக்தி' கிடைக்கும்; ஆகையால் சிதம்பரம் கோயில்தான் சிறந்தது," என்று, தென்னாற்காடு மாவட்டக் கலெக்டர் உத்தண்டராமன், சிதம்பரம் நடராசர் கோயில் கும்பாபிஷேகத்தையொட்டி நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்!

"சிவன்கோயில் இருக்கும் திருவாரூரில் பிறந்தால் 'முக்தி' கிடைக்கும் என்று சொல்கிறார்கள்; ஆனால், 'முக்தி' கிடைக்க வேண்டும் என்பதற்காகத் திருவாரூரில்போய்பிறக்கமுடியாது; இதுபோலத்தான் கங்கை நதியில் விழுந்து மாண்டுபோனாலும் 'முக்தி' கிடைக்கும் என்றும் சொல்லப்படுகிறது; ஆனால், கங்கை நதியில் மட்டுமல்ல— எங்கு வேண்டுமானாலும்கூட யாரும் நதியில் விழுந்து சாக மனம் துணிய மாட்டார்கள்; இந்த இரண்டும் முடியாத காரியங்கள் ஆகும்; எனவே, சிதம்பரம் கோயிலில் இருக்கும் நடராசப் பெருமானைக் கும்பிட்டுவிட்டாலே போதும்—'முக்தி' கிடைத்துவிடும்; சாமி கும்பிடுவது என்பது எல்லோரும் செய்யக்கூடிய காரியம்தான்" என்று அவர் மேலும் கூறியிருக்கிறார்!

★

சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலில் நடக்க இருக்கும் கும்பாபிஷேகத் திருவிழாவையொட்டி அங்கு பந்தோபஸ்துக்காக இரயிலில் சென்று கொண்டிருந்த போலீஸ்காரர் ஒருவர் திடீரென மரணமுற்றாராம்!

திருவள்ளூரைச் சேர்ந்த வீரராகவன் எனும் பெயருடைய அந்தப் போலீஸ்காரர் சென்னையிலிருந்து சிதம்பரத்திற்குச் சென்று கொண்டிருந்ததாகவும், இரயில் வண்டி வராகப்பேட்டை நிலையத்தை அடைந்ததும் அவர் மயக்கமுற்றுக் கீழே விழுந்தார் என்றும், வண்டி கடலூர் என். டி.-யை அடைந்ததும், இரயில்வே அதிகாரி அந்தப் போலீஸ்காரரை கீழே இறக்கினதாகவும், சில நிமிடத்திற்குள் அந்த இடத்திலேயே அவர் மரணமுற்றதாகவும் கூறப்படுகிறது.

தி.மு.க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் செங்குன்றம் வருகை

★

"12—7—55 அன்று, செங்குன்றம் (ரெட்ஹில்ஸ்) அடுத்த கிராண்டு லயனில் உள்ள வ. உ. சி. மன்றத்திற்கு வருகைதர பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இசைந்துள்ளார். எனவே, மாநில மாநாட்டிற்கு நிதி தர விரும்பும் செங்குன்றத்தைச் சுற்றியுள்ள தி. மு. கழகங்கள், படிப்பகங்கள், மன்றங்கள் அனைத்தும், மாலை நடத்தும் பொதுக்கூட்டத்தில் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, வ. உ. சி. மன்றச் செயலாளர் தோழர் ஆ. சுப்பிரமணியன் அறிவிக்கிறார்.

பம்பாய் தி. மு. கழக

பொதுக்குழு உறுப்பினர்கட்கு

"10—7—55 காலை 10-30 மணிக்கு, பம்பாய் தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம், பாண்டுப் தி. மு. கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது மாநில மாநாட்டுக்கு நிதி அனுப்புவது போன்ற முக்கிய பிரச்சினைகள் விருப்பதால், பொதுக் குழு பிரதிநிதிகளும், கிளைக் கழகச் செயலாளர்களும் வருகை தருமாறு வேண்டுகிறேன்,"

என்று, பம்பாய் தி. மு. கழக தலைமைச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அறிவிக்கிறார்.

மாநிலமாநாட்டு நிதிக்கு

'வீர சிவாஜி' — நாடகம்

8—7—55 இரவு 10 மணிக்கு, வாளவாடி, பாலதேண்டபாணி மின்சார நாடக அரங்கில், உடுமலை தி. மா. மு. கழகத் தோழர்கள் நடிக்கும் 'வீர சிவாஜி'—நாடகம், தோழர் பி. என். ராமானுசம் தலைமையில் நடைபெறும்.

'அத்தான்'—நாடகம்

9—7—55 மாலை 6 மணிக்கு, சென்னை-எழும்பூர் மியூசியம் தியேட்டரில், மீர்சாகிப் பேட்டை அழகிரி நாடக மன்றத்தாரின் 'அத்தான்'—நாடகம் திரு. நாரண துரைக்கண்ணன் தலைமையில் நடைபெறும்.

'மூன்று ஒலிகள்'—நாடகம்

மதுரை, சிங்காரபுரம், சத்தியவாணிமுத்து அம்மையார் படிப்பக நிதிக்காக, மதுரை விக்டோரியா எட்வர்ட் மண்டபத்தில், 10-7-55 அன்று, தோழர் மதுரை எஸ். முத்து தலைமையில், கருணாநிதி கலை மன்றத்தாரால் 'மூன்று ஒலிகள்'—நாடகம், மாலை 6-30, இரவு 10-30 மணிக்குமாக இரண்டு ஆட்டங்கள் நடைபெறும். கட்டணம்: ரூ. 2, 1, அணா 8.

திருமணம்

8—7—55 காலை 6 மணிக்கு, பஞ்சநதிக்குளம், கீழச்சேத்தியில், தோழர் பொ. ரா. பரஞ்சோதி—தோழியர் சேதுபதி திருமணம், தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும். தோழர் ந. தருமலிங்கம் பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.